பக்கங்கள் 15 காசுகள்

பதிவு எண் எம். 8798

தீக்கதிர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] நாளிதழ்

கதிர் 12. மதுரை 26—12—74 வியாழன். மலர்: 299

[illegible]ல் உ[illegible]பத்தி

[illegible], டிச. 23—

[illegible]வ நிலைகள் பாதகமாக இ[illegible] போதிலுங்கூட [illegible]3ம் ஆண்டில் உற்பத்தி செய[illegible] கோடி டன் [illegible]ு தானியத்தைவிட் 1974-ல் [illegible]கமாக உற்பத்தி [illegible]துள்ளது என நவ சீன செய[illegible] நிலையம் தெரி[illegible]ள்ளது.

கடுங்குளிருக்கு 200 ஏழைகள் பலி

பாட்னு, டிச. 24—

கடுங்குளிருக்கு வடமாநிலங்களில் 200 ஏழைகள் பலியாகியுள்ளனர்.

பீகாரில் 120 பேரும், உ. பியில் 50 பேரும், ராஜஸ்தான், ம. பி. மாநிலங்களில் 30 பேரும் இறந்தார்கள்.

குடியிருப்பும், தக்க பாதுகாப்புச் சாதனங்களும் இல்லாது குளிரால் செத்துக் கொண்டிருக்கும் ஏழை மக்களைக் காக்க, அம்மாநிலங்களில் ஆட்சி புரியும் காங்கிரஸ் அரசுகள் போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

[illegible]பஞ்சப்படி பாக்கிகளை பெற, மத்திய — மாநில அரசு ஊழியர்கள் போர்க் கொடி

[illegible]தேவைக்குரிய ஊதியம் பெற சர்க்கரை ஆலை, துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தம்

இந்தியா முழுவதும் போராட்டக் குமுறல்

வேலை நிறுத்த உரிமையைப் பறிக்க மத்திய அரசின் ஜனநாயக விரோத முயற்சி

சென்னை, டிச. 25 —

அதிகரித்துக் கொண்டேயிருக்கும் விலைவாசி உயர்வினல் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களும், மத்திய-மாநில அரசு ஊழியர்களும் போர்க்கொடி ஏந்திவிட்டார்கள். தேவை அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பி ஒன்றின்பின்னொன்ருகவும், ஒரே சமயத்தில் பலவாகவும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெடித்துள்ளன. தொழிற்சங்க ஒற்றுமையும் ஒன்றுபட்ட போராட்டங்களும் இவற்றில் முக்கிய அம்சமாக முன் வந்துள்ளது.

வேலை நிறுத்த உரிமை ஒரு ஜனநாயக உரிமை என்று பார்க்காமல், அந்த உரிமையைப் பறித்துவிட வேண்டுமென்று ஜனநாயக விரோதப் பாதையில் மத்திய அரசு முனைப்புக் காட்டி வருகிறது

அண்மைக்காலத்தில் எந்த நாட்டிலும் கண்டிராத முறையில் எல்லாப் பொருள்களின் விலைவாசிகளும் ஏறிவிட்டன. குறிப்பாக, உணவுப் பொருளின் விலை இருமடங்காக ஏறிவிட்டது.

இதனல், வாங்குகின்ற சம்பளம் போதாமல், வந்த துன்பம் தீராமல், உழைப்பாளிகளின் வாழ்க்கைத்தரம் ஒரேயடியாய்ச் சரிந்து விட்டது.

இந்த நிலையில் ஆட்சியாளர்களும் சரி ஆலை அதிபர்களும் சரி, தத்தம் கொள்ளை சுரண்டலில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கிருர்களே தவிர, கால நிலையைப் புரிந்து கீழிறங்கிவரத்தயாராக இல்லை. உழைப்பாளர்களின் கோரிக்கை முழக்கங்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆகிவிட்டது.

ஐக்கிய போராட்டங்கள்

இங்நிலையில், ஆளவந்தார்களுக்கும் ஆலையதிபர்களுக்கும் இந்தியில் பேசினுலும் புரியாது; ஆங்கிலத்தில் பேசினுலும் புரியாது. இந்தியாவில் பேசப்படும் 281 மொழிகளில எந்த மொழியில் பேசினுலும் புரியாது. அவர்களுக்குப் புரியக்கூடிய ஒரே மொழி 'போராட்டம்' ஒன்றுதான்.

சங்க பேதமின்றி, அரசியல் வேறுபாடு இன்றி ஒன்று சேர்ந்தால்தான், போராட்டமொழி புரியும் மொழியாக இருக்கும் என்பதைத் தொழிலாளர்களும் அரசு ஊழியர்களும் அனுபவத்தில் புரிந்துகொண்டு அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு, கூட்டுப் போராட்டக் குழுக்கள் அமைத்து களத்தில் இறங்கி விட்டன.

தமிழக சர்க்கரை ஆலைகளில் வேலைநிறுத்தம்

தமிழ்நாட்டில் 16 சர்க்கரை ஆலைகளிலும், பாண்டிச்சேரியிலுள்ள அரியூர் சர்க்கரை ஆலையிலுமாக ஆகமொத்தம் 17 ஆலைகளைச் சேர்ந்த 25 ஆயிரம் தொழிலாளர்கள் 23—12—74 முதல் வேலைநிறுத்தம் செய்து வருகிருர்கள்,

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை சி ஐ டி யூ, ஏ ஐ டி யூ சி, ஐ என் டி யூ சி, அண்ணு தி மு க தொழிற்சங்கம், தி மு க தொழிற்சங்கப் பேரவை முதலான பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழு தலைமை தாங்கி நடத்துகிறது.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் என்ன?

அகில இந்திய வாழ்க்கைப் புள்ளி 200க்கு ரூ. 350 குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளமாகக் கொண்டு — வேலைத் தாராதரங்களைப் புனரமைத்து கிரேடுகளை நிர்ணயிக்க வேண்டும்.

மேலே கண்ட 200 புள்ளிக்குமேல் அதிகரிக்கக்கூடிய ஒவ்வொரு புள்ளிக்கும் பஞ்சப்படி ரூ. 1-75 வீதம் மாதந்தோறும் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். இன்று வாழ்க்கைப்புள்ளி 301.

மற்றும் லே-ஆப் காலங்களில் முக்கால் சம்பளம் தரவேண்டும்.

ஊதியத்தில் 15 சதமானம் வீட்டு வாடகை அலவன்சாகத் தரவேண்டும்.

கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியச் செலவும், சிகிச்சைக்காலத்துக்கு ஊதியமும்தரவேண்டும்.

மற்றும் இரவு வேலை அலவன்ஸ் ரூ. 3 அத்தியாவசியப் பொருள்களை மலிவு விலையில் வழங்கல் — காண்ட்ராக்ட் முறை ஒழிப்பு கேசுவல், என். எம். ஆர், பதிலி ஆகிய வேலையாளர்களுக்கு, அமர்த்தப்படுகின்ற வேலையாளர்களுக்கான ஊதியத்தை வழங்க வேண்டும்.

—போன்ற 10 கோரிக்கைகளை வழங்க வேண்டுமென்றும்—இதை 1—11—73 முதல் வழங்க வேண்டுமென்றும் போராடி வருகிருர்கள்.

2 லட்சம் துறைமுக தொழிலாளர் ஸ்டிரைக்

சென்னை; கல்கத்தா, பம்பாய் முதலான 8 துறைமுகங்களில் வேலை பார்க்கும் 2 லட்சம் தொழிலாளர்கள் ஜனவரி 16முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கிருர்கள்.

1971 ஜனவரி 1முதல் மாதம் ரூ 100 வீதம் இடைக்கால பஞ்சப்படி உயர்வு அளிக்க வேண்டுமென்று அகில இந்தியத் துறைமுகத் தொழிலாளர் சம்மேளனம் கோருகிறது.

மத்திய அரசும், துறைமுக அதிகாரிகளும் சண்டித்தனம் செய்வதினல்தான் வேலைநிறுத்த முடிவு எடுக்க நேரிட்டது என்று சம்மேளனத் தலைவர் எஸ், ஆர். குல்கர்னி தெரிவித்தார்,

தற்போதுதுறைமுகத்தொழிலாளிக்கு குறைந்தபட்சம் ரூ 267·52 ஊதியமாகக் கிடைப்பதாகவும், மற்ற அரசாங்க நிறுவனங்களில் ஒரு ஊழியருக்கு குறைந்தபட்சம் ரூ. 515 ஊதியமாகத் தரப்படுவதாகவும் குல்கர்னி தெரிவித்தார்.

துறைமுகத் தொழிலாளருக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட 5வருட ஒப்பந்தம் 1973 டிசம்பர் 31ந் தேதியோடு காலாவதி ஆகிவிட்டது.

8500 சிமிண்டு தொழிலாளர் ஸ்ட்ரைக்

தமிழ்நாட்டில் சங்ககிரி, தாழையூத்து, ஆலங்குளம் ஆகிய மூன்று பெரிய சிமிண்டு ஆலைகளில் பணிபுரியும் 8500 தொழிலாளர்கள் போனஸ் உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்து வருகிருர்கள்.

இவர்களில் சங்ககிரி ஆலையின் 4000 தொழிலாளர்கள், அனைத்துசங்க போராட்டக் குழுவின் தலைமையில் கடந்த 45 நாட்களுக்கும் மேலாக போராடி வருகிருர்கள். அவர்களில் 1000 பேர்களை "தொழிலாளர் நல அரசு" என்று வாய் வீச்சடிக்கும் திமுக அரசின் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிருர்கள்.

சங்ககிரி, தாழையூத்து ஆகிய இரு ஆலைகளிலும் திமுக மந்திரியான ஆதித்தனுருக்கு அதிகப் பங்குகள் இருக்கின்றது என்ற காரணத்தினுல்தான் அரசு தலையிடத் தயங்குவதாகக் கூறப்படுகிறது. சங்ககிரி தொழிலாளர் போராட்டக் குழுவில் திமுக சங்கமும் இருந்தாலும் கூட, தி. மு. க. தொழிலாளர்களைப்பற்றி சிந்திக்காமல் தி. மு. க. முதலாளியைப் பற்றியே அரசுக்கு அதிக அக்கறை இருந்து வருகிறது.

30 லட்சம் மத்திய ஊழியர் போர் முழக்கம்

தங்களுக்குக் கிடைக்கவேண்டிய 4 பஞ்சப்படி பாக்கிகள் மறுக்கப்படுவதை எதிர்த்து, மத்திய அரசின் 30 லட்சம் ஊழியர்கள் ஆத்திரமடைந்திருக்கிருர்கள்.

பஞ்சப்படிபாக்கிகள் கொடுக்கப்படுமா என்ற கேள்வி ராஜ்ய சபையில் எழுந்தபோது, மந்திரிகள் மழுப்பினுர்களே தவிர "கொடுக்கப்படும்" என்று கூறவில்லை, இதனுல் பலத்த சர்ச்சையும் ஏற்பட்டது. அரசு போகின்ற போக்கைப்பார்த்தால் பஞ்சப்படி பாக்கிகளை இனி தரமாட்டார்கள் எனறே தெரிகின்றது, அதுவும்தேர்தல் வரவிருக்கின்ற சமயத்தில் பஞ்சப்படி பாக்கிகளை கொடுக்க மறுத்துவிட்டால ஆளும் கட்சிக்கு பெரும் பாதிப்புவருமென்றும் ஆளுங்கட்சியினர்பயப்படுகிருர்கள்

அப்படியிருந்தும் கூட, பஞ்சப்படி பாக்கி கொடுக்காமல் மழுப்பி வருவதால் போராடித்தான் பெறவேண்டுமென்ற முடிவுக்கு ஊழியர்கள் வந்துவிட்டார்கள்.

ஒரு அகில இந்திய வேலைநிறுத்தத்துக்கு தயாராகுமாறு ஐக்கிய தொழிற்சங்கக் கவுன்சில் அறைகூவல் விடுத்துள்ளது.

அக்கவுன்சிலின் பொதுச்சபைக் கூட்டம் இம்மாதம் 22,23 தேதிகளில் புதுடில்லியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் சி ஐ டி யூ, ஹிந்த் மஸ்தூர் பஞ்சாயத், ஐக்கிய தொழிற்சங்கக் காங்கிரஸ், லெனின் சாரனி, அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் அசோசியேசன் முதலியன பிரதிநிதிகளை அனுப்பி கலந்து கொண்டன.

மற்றும் இக்கூட்டத்திற்கு மத்திய அரசு ஊழியர்களின் மகாசம்மேளனமும் தபால்-தந்தி ஊழியர் சம்மேளனமும் பார்வையாளர்களை அனுப்பி வைத்து கலந்து கொண்டன,

அனைத்து மாநில அரசு ஊழியர்களும் வேலைநிறுத்த தயாரிப்புகளை மேற்கொள்ளுமாறும் ஐக்கிய தொழிற்சங்கக் கவுன்சில அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழக என்.ஜி.ஓக்கள் தயார்

மத்திய அரசு 4 பஞ்சப்படி பாக்கிகளை கொடுக்காமல் இருக்கின்றதென்ருல், தாய் ஒருஅடி பாய்ந்தால் குட்டி எட்டடி பாயும் என்பது போல் தமிழக மாநில அரசு 8 பஞ்சப்படி பாக்கிகளைக் கொடுக்காமல் வைத்திருக்கிறது.

பஞ்சப்படி பாக்கிகளைப் பெறுவதற்காக, 1975 ஜனவரி 4ந் தேதியன்று மாநில அரசு ஊழியர்கள் அனைவரும் ஒருநாள் உண்ணுவிரதம் இருக்க முடிவெடுத்திருக்கிருர்கள்.

இந்த உண்ணுவிரதபோராட்டத்தில் திரு சிவ. இளங்கோ தலைமையிலுள்ள பிரிவினரும், திரு. கூடலிங்கம், பரதன், குத்புதீன் முதலானவர்களைமாநிலசெயல்கமிட்டியாக கொண்ட பிரிவினரும் இருசாராரும் பங்கெடுத்துக் கொள்ளுகிருர்கள்.

அடுத்து, 1975 பிப் மார்ச் மாதங்களில் நடக்கவிருக்கும் பட்ஜெட் கூட்டத்தின் போது, பத்தாயிரக்கணக்கான என். ஜி. ஓ. கள் சென்னை கோட்டையை முற்றுகையிடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு நியமித்துள்ள பஞ்சப்படி கமிஷனின் தீர்ப்பானது; மத்திய அரசு ஊழியர்களுக்கு கிடைக்கும் பஞ்சப்படியை விடக் குறைவாக இருக்குமேயானுல், கட்டாயம் கோட்டை முன் கெரோ போராட்டம் நடக்கும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

மத்திய அரசின் வக்கரிப்பு

நாடு முழுவதும் இவ்வாறு போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், மத்திய அரசின் போக்குஎவ்வாறு இருக்கிறது?

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தையே நடத்த முடியாதென்றும் — வேலை நிறுத்தம் செய்வதில்லை என்று உறுதியளித்தால்தான் அதனுடன் பேச முடியுமென்றும் ரெயில்வே மந்திரி மிஸ்ரா கூறியிருக்கிருர். ரயில்வே தொழிலாளர் பற்றிய பிரச்னையில் மட்டுமல்ல, அனைத்துத் தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையைப் பறிப்பதுதான் மத்திய அரசின் நோக்கம் என்பதை மத்திய அரசின் அரசியல், பொருளாதார மந்திரி சபையே முடிவு செய்ததிலிருந்தே தெரிகிறது.

இவ்வாறு தொழிலாளர்களின் ஜனநாயக உரிமையையே, மத்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பறிக்க முயல்கிருர்கள்.

[illegible]கூலிஉயர்வு கொடுக்க மறுக்கும் பஞ்சாலை முதலாளிகளின் கொழுத்த லாபம்

புதுடெல்லி, டிச. 23—

பஞ்சாலை முதலாளிகள் தங்களுக்கு லாபமே இல்லை என கூப்பாடு போடுகிருர்கள். விலைவாசி உயர்கிறது. கூலி உயர்வு கொடு என்று தொழிலாளர் கேட்டால் லாபமே இல்லை நட்டம்தான் என ஒப்பாரி வைக்கின்றனர், மறுக்கின்றனர். தொழிலாளர்களுக்கு போராட்ட நிர்ப்பந்தங்களை கொடுக்கின்றனர்.

ஆனல், 73—74ம் ஆண்டு வரை கொழுத்த கொள்ளை லாபத்தையே பஞ்சாலை முதலாளிகள் அடைந்துள்ளனர்.

கடந்த மூன்றுவருடத்தில் பஞ்சாலை முதலாளிகளின் லாபம் 6 மடங்கு உயர்ந்துள்ளது என பஞ்சாலைக் கமிஷனர் ஆய்வுதெரி[illegible]றது.

பஞ்சாலைக் க[illegible]ரின் ஆய்வின்படி 249 [illegible]சாலைகளின் நிகர லாபம் 71—72ம் ஆண்டின் 11கோடியே 4லட்சத்திலிருந்து 31 கோடியே 34லட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

மேலும் 223 பஞ்சாலைகளது 1973—74ம் ஆண்டின் லாபம் வட்டி, வரி, வளர்ச்சிக்கான தள்ளுபடி இவைகளெல்லாம் போக நிகர லாபம் 63கோடியே 55 லட்சம் ரூபாயாக தாவியுள்ளது என்றும் பஞ்சாலை கமிஷனரின் ஆய்வு தெரியப்படுத்துகிறது.

மேலும், விற்பனேயோடு ஒப்பிட்டு பார்த்தால் லாப உயர்வு அனைத்து பஞ்சாலை கம்பெனிகளிலும் அதிகரித்துள்ளது என்ருலும் குறிப்பிட்ட கம்பெனிகளில் அம்மூன்று ஆண்டுகளிலும் 5 மடங்கு அளவு உயர்ந்துள்ளது என்றும் அக்கமிஷன் ஆய்வு தெரிவிக்கிறது.

மேலும் தரமான உயர்தரமான துணிகளை மட்டும் விற்று பெருங்கொள்ளையடித்தது மட்டுமல்லாமல் ஏழை மக்களுக்காக என்று சொல்லி கண்ட்ரோல் விலையில் அதாவது மலிவு விலைத் துணி என்ற பெயரில் மீட்டர் ரூ. 1-25 என்றும் ரூ. 1-50 என்றும் விற்கப்படும் துணிகளில் கூட லாபம் அடைந்துள்ளனர் பஞ்சாலை முதலாளிகள் என்றும் அக்கமிஷனரின் ஆய்வு தெரிவிக்கிறது.

மேலும் இவ்வாறு உள்நாட்டு மார்க்கெட்டில் கொள்ளையடிக்கும் பஞ்சாலை முதலாளிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துணிகளிலும் பெரும் கொள்ளைலாபம் கிடைத்துள்ளது.

சீனி முதலாளிகளின் பேராசை

புதுடெல்லி, டிச, 22—

அதிகமான சீனி ஏற்றுமதி செய்ய அதிகமான உற்பத்தி செய்யப்படவேண்டும். எனவே, சீனி முதலாளிகளுக்கு அவர்களிடம் லெவி முறையில் வாங்கப்படும் சீனிக்கு அதிகவிலை கொடுக்கவேண்டும் என்று தமிழ்நாட்டிலேயே முதல்பெரும் சீனி முதலாளியும் இந்தியாவிலேயே 2 வது பெரும சீனி முதலாளியுமான கோவை மகாலிங்கம இங்கு நிருபர்களிடையே கூறினுர்.

மேலும், அரசாங்கம் "யதார்த்த பூர்வமான விலைக் கொள்கை"யை கடைப்பிடிக்குமானல் ஆண்டுக்கு 20 லட்சம் டன் சீனி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியுமாம, இதனை அச் சீனி முதலாளி மகாலிங்கம் கூறினுர்.

சீனி முதலாளிகள் உற்பத்தி செய்யும் சீனியில் ஒரு பகுதியை அரசிடம் தெரிவிப்பதில்லை. அந்த சீனியையும் கணக்கு காட்டிய சீனியில் 30 சதவீத சீனியையும் பொதுமார்க்கெட்டில் இஷ்டப்படிவிற்று கொள்ளையடிக்கிருர்கள். இதுவும் போதாதென்று, கணக்கு காட்டிய சீனியில் அரசுக்கு கொடுக்கும் 70 சதவீத லெவி சீனியின் விலையை கூட்ட வேண்டுமாம்.

இதனல், ரேஷன் கடைகளில் மக்களுக்குகிடைக்கும் அரைகுறை அளவான சீனியின் விலையும் கூடுமே என்பதைப் பற்றி சீனி முதலாளிகளுக்கு கவலை எப்படி இருக்க முடியும்? அவர்களுக்கு வேண்டியது கொள்ளைலாபம்.

டிசம்பர் 28, 29	பெண் குலத்தின் எழுச்சி திருவாரூர் மாநாடு புதியசரித்திரம்படைத்திட புறப்பட்டுவாரீர்

தீக்கதிர்

ஊதிய முடக்கம் அல்ல ஊதிய வெட்டே

மத்திய அரசு ஊழியர்களுக்கு, நாலு பஞ்சப்படி பாக்கிகள் பட்டுவாடா செய்யப்பட இருக்கிறது. இதைக்கொடுக்காமல் எப்படியாவது மழுப்பிவிட வேண்டுமென்று மத்திய அரசு பலவிதசெப்பிடுவித்தைகளில் ஈடுபட்டுள்ளது பத்து நாட்களுக்கு முன்னர் நிதிமந்திரி சி. சுப்ரமண்யம் விடுத்த அறிக்கையொன்றில் இந்த 4 பஞ்சப்படி பாக்கிகளையும் கொடுக்காமல், முடக்கி வைப்பதுதான் அரசின் உத்தேசம் என்று குறிப்பிட்டார்.

மந்திரியின் இந்த அறிவிப்பு மத்திய அரசு ஊழியர்கள் மத்தியில் பெரும் சோபத்தையும் கொந்தளிப்பையும் உண்டாக்கியுள்ளது பார்லிமெண்டில் மந்திரியின் அறிவிப்பைக் கேட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் — சாங்கிரஸ் அரசுக்கு மிகவும் வேண்டிய வலது கம்யூனிஸ்ட் கட்சியினர் உள்பட — கண்டனமாரி பொழிந்து, அரசினரைத் திணறடித்து விட்டார்கள்.

அதனால் என்ன செய்வதென்று தெரியாமல், திட்டவட்டமான பதில் அளிக்க வகையின்றி விழிக்கிறார்கள்.

இப்பொழுது அரசின் போக்கு முன்னைவிட மோசமாக இருக்கிறது. கடந்த ஜூலை மாதத்தில் ஊதிய முடக்கம் கொண்டு வந்த போது அரைகுறை முடக்கமாகத் தான் இருந்தது. இப்போது மொத்தத்தையும் முடக்கம் செய்ய முயல்கிறார்கள்; காரணம், மத்திய அரசின் நிதிநிலைமை படுமோசமாக இருப்பதால், மொத்த முடக்கத்தை அமுல்படுத்த முதலில் தன்னுடைய சொந்த ஊழியர்களைத்தான் சோதனைக்கூடமாக ஆக்குகிறார்கள்.

மத்திய அரசு ஊழியர்களிடம் முழு முடக்கம் கொண்டு வந்தால். மாநில அரசுகளும் அதைப் பின்பற்றத்தான் செய்யும். அதைப் பார்த்து மாநகராட்சிகளும் நகராட்சிகளும் செய்யத்தான் செய்யும்.

பிறகு இந்த விஷம் தனியார் துறை தொழில்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும், நீளும் பொதுத்துறை தொழில்களிலும் படரும். பிறகு எந்தவொருதொழிலாளியும் ஊழியரும் தப்பமுடியாது.

இந்த மொத்த முடக்கத்தையும் கைகட்டி வாய் பொத்தி ஏற்றுக்கொள்ள மத்திய அரசு ஊழியர்கள் தயாராக இல்லை. மற்றெந்த ஊழியரும் தொழிலாளரும் தயாராக இல்லை. இந்த நிலையில், அனைத்து உழைப்பாளரின் எதிர்ப்பும் இமயமலைபோல் எழத்தான் செய்யும்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இரயில்வே தொழிலாளர் போராட்டத்தை உடைக்க மத்திய அரசு காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளை அவர்கள் மீது கட்டவிழ்த்து விட்டது.

அந்த இரத்தக் காட்டேரி ஆட்டத்தை இன்னும் விரிந்த அளவில் நடத்துவதற்கு மத்திய அரசு தயாராவதாகவே தெரிகிறது.

மத்திய அரசின் இந்தப் போக்கினால், வரப்போகின்ற காலங்களில் தொழில் அரங்கத்தின் நிலைமை படுமோசமாகப் போகிறது.

பஞ்சப்படி பாக்கிகளைக் கொடுத்தால் திட்ட வேலைகள் பாதிக்கப்படுமென்றும், பணவீக்கம் அதிகரித்துவிடுமென்றும் சி. சுப்ரமண்யம் கூறுகிறார்.

இந்த வாதங்களெல்லாம் உலுத்துப்போன குப்பைகள். உண்மையான வருமானம் விழுந்து கொண்டேயிருக்கும் போது—பொறுமையின் கடைசி முனையையும் தாண்டி விடக்கூடிய அளவுக்கு வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்து விட்ட நிலையில் மந்திரியின் பேச்சைக் கேட்க நாதி ஏது?

எந்தவொரு முதலாளியும் எந்தவொரு நிருவாகியும் தம்மிடம் பணமில்லை என்ற காரணத்தைக்காட்டி, தன்னுடைய ஊழியர்கள் வயிற்றில் மண்ணை அடிக்க முடியாது. ஒப்புக்கொண்டு வழக்கமாக இருந்துவரும் ஊதியங்களையும் வேலை நிலைமைகளையும் வெட்டுவதற்கு எந்தவொருதொழிலாளியும் ஊழியரும் சம்மதிக்கமாட்டார்.

மத்திய அரசு செய்வது ஊதிய முடக்கம் அல்ல. ஊதிய வெட்டேயாகும். இதைஒருவரும் அனுமதிக்கப்போவதில்லை.

அமெரிக்காவிலேயே சி. ஐ. ஏ.யின் கைவரிசைகள்

நியூயார்க், டிச. 23— ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனையே கடித்தது போல உறவு நாடுகள் மீதும் எதிரி நாடுகள் மீதும் உளவு வேலைகளுக்கு சிஐஏ உளவுத்துறையை பயன் படுத்திய அமெரிக்க அரசாங்கம், தன் சொந்த மக்களை கண்காணிக்கவும் சிஐஏ உளவு ஸ்தாபனத்தை பயன்படுத்துகிறது.

யுத்த எதிர்ப்பு இபக்கம், அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டோர் ஆகியோர் மீது சட்ட விரோதமான முறையில் உளவு வேலைகளை சிஐஏ செய்து வருகிறதென்று 'நியூயார்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டில் உளவு வேலைகளை நடத்துவதற்கென்று சிஐஏயின் ஒரு தனிப்பகுதி செயல்பட்டு வருகிறதென்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அரசுக்கு எதிராக உள்ளவர்கள் என சந்தேகத்திற்குரியவர்களின் கடிதங்களை உடைத்துப் பார்த்தல், அவர்களது டெலிபோன் பேச்சுகளை டேப் ரிகார்டில் பதிவு செய்தல் போன்ற 12 வகையான சட்டவிரோத நடவடிக்கைகளை சிஐஏ உளவு துறையினர் மேற்கொள்கின்றனர். இந்த நடவடிக்கைகள் சிஐஏயின் டைரக்டரின் உத்தரவின் பேரிலேயே அமுல்படுத்தப் படுகின்றன என்றும் அப்பத்திரிகை தெரியப்படுத்துகிறது.

சிஐஏ உளவு ஸ்தாபனம் 1947-ல் ஆரம்பிக்கப்பட்டு வெளி நாடுகளில் தன் கைவரிசையை ஆரம்பித்தது. 1950-ல் உள்நாட்டில் தனது திருவிளையாடல்களை ஆரம்பித்தது.

அப்படியானால் இதற்கு முன்பு அமெரிக்காவிற்குள் உளவு வேலைகள்செய்ய அரசாங்கத்தின் உளவு ஸ்தாபனம்எதுவுமில்லை என்று அர்த்தமல்ல. இது, உளவு ஸ்தாபனங்களுக்கும் உளவு ஸ்தாபனமாக இருந்து வருகிறது.

பென்டகன் எனப்படும் ராணுவத் தலைமையகத்தில் உள்ள ராணுவ

(8-ம் பத்தி பார்க்க)

பிற மாநிலங்களைப் போல தமிழகத்திலும்

ஒரே போக்குவரத்துக் கழகம் அமைத்திடுக! பழிவாங்கலை உடனே ரத்துச் செய்க!

தனியார், பொதுத்துறை போக்குவரத்து தொழிலாளர் மதுரை மாநாடு கோரிக்கை

மதுரை. டிச. 24— தனியார்துறை போக்குவரத்தை பொதுத்துறைக்கு மாற்றும்போது. அங்குள்ள தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அரசுப்போக்குவரத்தில், தொழிற்சங்கப் பணியை முடக்கும் நோககத்துடன் முன்னணி ஊழியர்களைப் பழிவாங்கும் போக்கைக் கைவிடவேண்டும் என்றும் இங்கு நடந்த திருச்சி—மதுரை —நெல்லை—முகவை மாவட்ட பொதுத்துறை— தனியார்துறை போக்குவரத்து தொழிலாளர்மாநாடு வற்புறுத்தியது.

கடந்த 22ந் தேதியன்று இங்குள்ள விக்டோரியா எட்வர்டு ஹாலில் நடந்த இம்மாநாட்டுக்கு மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் தலைவரும், தமிழக சிஐடியூ பொருளாளருமான தோழர் வி கார்மேகம் தலைமை வகித்தார்.

அரசுப் போக்கு வரத்து ஊழியர் சங்கம், பி ஆர் சி தொழிலாளர்சங்கம், மதுரை மோட்டார் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் செயலாளர் தோழர் எஸ் மன்னர்சாமி அறிக்கை சமர்ப்பித்தார்.

வி. பி. சிந்தன் வாழ்த்து

மாநாட்டை வாழ்த்தி தமிழக சிஐடியூ துணைத் தலைவரும், சென்னை அரசுப் போக்குவரத்து தொழிலாளர் சங்கம், பல்லவா போக்குவரத்து தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவருமான தோழர் வி.பி.சிந்தன், தேசிய போக்குவரத்து தொழிலாளர் —ஸ்டாப்யூனியன்சார்பில்எஸ் திருப்பெருந்துறைபாண்டியன்போக்கு வரத்து அண்ணா தொழிலாளர் சங்கம் சார்பில் கனகராஜ் ஆகியோரும் மற்றும் ப.மு. குமார் (பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்) ஜி. ஜி. சுந்தரம் (மின் ஊழியர் சங்கம்) துரைராஜ் (தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன்] ஜெ. எஸ். கிருஷ்ணமூர்த்தி (கைநெசவுத் தொழிலாளர் சங்கம்) சு. பாலதண்டாயுதபாணி (இந்திய மாணவர் சங்கம்) எம். கமலம் (ஜனநாயக மாதர் சங்கம்] ஆகியோரும் போககுவரத்து தொழிலாளர் சங்கங்களைச் சார்ந்த புதுக்கோட்டை சுப்ரமண்யம், பெரியகுளம் ரஜாக், கோவை தாமோதரன், திண்டுக்கல் பழனி, எஸ். வி, ராஜன் (கட்டபொம்மன் போக்குவரத்து)எம் சாந்தாப் பிள்ளை(மதுரை) ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

தீர்மானங்கள்

பொதுக் கோரிக்கை தீர்மானத்தை வெள்ளைச்சாமி, பி. ஆர், சி. தொழிலாளர் போராட்ட தீர்மானத்தை வி. சேது, தனியார் துறைத் தொழிலாளர் சம்பந்தமான தீர்மானத்தை எம். தனுஷ்கோடி, அரசு போக்குவரத்து தொழிலாளர் பழிவாங்கப்படும் தீர்மானத்தை ஜெயசிங், பிராவிடண்ட் பண்டு சம்பந்தமான தீர்மானத்தை எஸ். மன்னர்சாமி ஆகிய தோழர்கள் சமர்ப்பித்து நிறைவேற்றினர்.

ஒரே கார்ப்பரேஷனுக்குக

பிற மாநிலங்களில் இருப்பதுபோல், தமிழகத்தில் உள்ள அனைத்து போக்குவரத்துத் துறை நிறுவனங்களையும் ஒன்றாக்கி ஒரே கார்ப்பரேசனாக ஆக்க வேண்டும் என்றும், ஒரே மாதிரியான வேலை நிலைமைகளும உரிமைகளும் சலுகைகளும் தொழிலாளர்களுக்கு அளிக்கவேண்டும் எனறும் மத்திய-மாநில அரசுகளை இம்மாநாடு கேட்டுக்கொண்டது.

அகில இந்திய போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தை மத்திய அரசு அங்கீகரிக்கவேண்டும் என்றும்—மற்றும் அகில இந்திய விலைவாசிப்புள்ளி 200க்கு ரூ, 350 சம்பளமும் அதற்கு மேலுள்ள ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ. 1.75 வீதம் பஞ்சப்படியும் வழங்குதல்— இடைககால நிவாரணம் ரூ. 100— 10 சதவீதம் பிராவிடண்ட் பண்டு பிடித்தம், 25 சதவீதம் போனஸ்—ஒரு வருட சர்வீசுக்கு ஒரு மாதச் சம்பளம் கிராஜுவட்டி, 6 மாத சர்வீஸ் ஆனவுடன் வேலை நிரந்தரம், தமிழ்நாடு முழுவதும் செல்ல குடும்ப பாஸ். வாரிசுகளுக்கு வேலை, போலீஸ் வழககுகளை நடத்த நிர்வாகம் நிதி உதவி, விபத்து வழக்கில் தண்டனைபெற்றால் வேலை நீக்கம் செய்யாதிருத்தல், நீண்டதூர பஸ்களுக்கு படி உயர்வு, வேலை நேரத்தில் தாக்கப்பட்டாலோ — விபத்தில்காயம்டைந்தாலோ முழுச் செலவையும் நிர்வாகம் ஏற்றல், கண்டக்டர் வேலைக்கு எஸ் எஸ் எல் சி தகுதி தேவை என்ற நிபந்தனையை ரத்துச் செய்தல் முதலிய 30 கோரிக்கைகள் வற்புறுத்தப்பட்டன.

ஊர்வல

அன்று மாலையில், பல்வேறு போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் மேலமாசி வீதியிலிருந்து புறப்பட்டு திடீர் நகரை அடைந்தது-

அங்கு கே. சாந்தாப் பிள்ளை தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வி பி சிந்தன், எஸ். மன்னர்சாமி புதுக்கோட்டை எஸ். சுப்ரமண்யம், தனியார்துறை போக்குவரத்து தொழிலாளர் சார்பில் தனுஷ்கோடி, பாண்டியன் போக்குவரத்து தொழிலாளர் சங்கம சார்பில் ஏ. வி. ராஜு, எஸ். வி. ராஜன், ஜெயசிங் ஆகியோர் பேசினர்.

அமெரிக்காவில்

மத்தியதர வர்க்க அவல நிலை

வாஷிங்டன். டிச. 23 "செல்வம் கொழிக்கும் சிங்கார சீமை" என்றுபுகழப்படும் அமெரிக்காவில் மத்தியத்தர வகுப்பைச் சார்ந்த மக்கள், மானிய விலைகளில் கிடைக்கும் உணவுகளுக்காக தொழிலாளர்களோடு க்யூவில் நிற்கிறார்கள் அந்த அளவுக்கு பணவீக்கத்தின் விளைவான விலைவாசிக் கொடுமை ஏற்பட்டுள்ளது,

மானிய விலை தானியத்திற்காக போட்டி போட்டுக் கொண்டு தொழிலாளர்களோடு க்யூவில் நிற்கும் மத்திய தர வகுப்பினர் தங்களுக்கே உரிய கௌரவத்தையெல்லாம் மூலையில் கட்டிப் போட்டுவிட்டனர்.

இவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் உள்ள மத்தியதர வகுப்பினரின் மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் குறைவானது என்றாலும் கூட, க்யூவில் நிற்கும் மத்திய தர வகுப்பாரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது,

மிக ஏழை மக்களுக்காக மானிய விலைக் கடைகள் திறக்கப்பட்டன. ஆனால் அவர்கள் பெறவேண்டிய டோக்கனுக்கு மத்திய தர வகுப்பினரும் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப் படவில்லை,

வருடம் 15 ஆயிரம் டாலர் —அதாவது மாதம் சுமார் 10ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் ஒரு மோட்டார் கம்பெனி அதிகாரியின் குடும்பம் அமெரிக்காவில் தேவையான முறையில் சாப்பிட முடியவில்லை.

7 அறைகள் கொண்டவீடு அந்த அதிகாரிக்கு. மேஜைகள், நாற்காலிகள் வசதியாக உள்ளன. இரண்டு டெலிவிஷன்கள் உள்ளன. இவைகள் அமெரிககாவில் இல்லாவிட்டால் கௌரவக் குறைச்சல். இவ்வளவையும் அனுபவிக்கும் அந்தக் குடும்பத்தில் 8 பேர் தேவையான உணவு உண்ண முடியவில்லை.

காரணம், உணவுபொருட்களின விலையேற்றம் மட்டுமின்றி வாங்கிய கடன்களும் அரசாங்க வரிகளும் அவரது சம்பளத்தின் கணிசமான பகுதியை பறித்துக்கொள்கின்றன.

வாரம் ஒன்றுக்கு உணவுக்காக 55 டாலர் (440 ரூபாய்) செலவழித்த அக்குடும்பம் இன்று 130 டாலர் (1040 ரூபாய்)செலவழிக்கவேண்டியுள்ளது. இது உணவுப் பொருட்களின் விலையேற்ற கொடுமை.

மானியவிலை தானியத்திற்காக அமெரிக்க அரசாங்கம் கடந்த வருடம் 270 கோடி டாலர் (2160 கோடி ரூபாய்) செலவழித்தது. இவ்வருடம் 420 கோடிடாலர்[3360கோடி ரூபாய்) செலவழிக்கிறது,

மானியவிலை தானியம் வாங்குவதற்கான டோக்கனை வாங்குவதில் லஞ்சம் கொடுக்கும பழக்கங்களும் தாராளமாக நடைபெறுகின்றன. முதலாளித்துவம் அல்லவா!

தமிழக அரசை மிஞ்சிய

கேரள அரசின் 'சாதனை'!

திருவனந்தபுரம், டிச. 24— பஞ்சாயத்து போர்டு தேர்தல் என்றாலே— கேரளத்தில் காங்கிரஸ் — வலது கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களுக்கு மார்கழி மாதக் குளிர் நடுக்கம் கண்டு விடுகிறது!

நேற்று - 23ம் தேதியன்று திருவனந்தபுரத்தில் கூடிய கேரள அமைச்சரவை, பஞ்சாயத்துப் போர்டு தேர்தலை அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை ஒத்தி வைத்து விட்டது.

பஞ்சாயத்து போர்டு தேர்தல் ஒத்தி வைக்கப் படுவது. இது பதினான்காவது தடவையாகும்! சுமார் 14 ஆண்டு காலமாக கேரளத்தில் பஞ்சாயத்துப் போர்டு தேர்தல்கள் நடத்தப்படாமலேயே இருக்கின்றன!

உணவுப் பஞ்சம், விலைவாசி உயர்வு, அடக்குமுறைகள், முடைநாற்றமெடுக்கும் ஊழல்கள் — இத்தனையையும் சிருஷ்டித்து மக்களின் கோபாவேசத்தைச் சம்பாதித்துள்ள காங்கிரஸ் — வலது கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் பஞ்சாயத்துப் போர்டு தேர்தலைச் சந்திக்க குலைநடுக்கம் கொள்கிறார்கள்!

ஸ்தல ஸ்தாபன தேர்தல்களை ஒத்தி வைக்கும சாதனையில் தமிழக ஆட்சியாளர்களைவிட கேரள ஆட்சியாளர்கள் பன்மடங்கு முன்னேறி விட்டார்கள்!

மதுரை—முகவை மாவட்ட

வி ச, வி தொ ச சிறப்பு மாநாடு

மதுரை, டிச. 23— வறட்சி நிவாரணப் பணிகளை வலியுறுத்துவதற்காக, மதுரை —முகவை மாவட்ட விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களின் சிறப்பு மாநாட்டை வருகிற ஜனவரி 3-ந் தேதி மதுரை வடக்குத் தாலுகா பொதும்பு கிராமத்தில் மதுரை-முகவை மாவட்ட விவசாயிகள் சங்கம் நடத்துகிறது.

இதற்கான முடிவுகடந்த 17ந் தேதி குமாரத்தில்நடநத விவசாயிகள் சங்க ஊழியர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

பாசிங்காபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் கே எம் நடராஜன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் கே. பி ஜானகியம்மாள் செயலாளர் வி ஏ கருப்புசாமி, கே எம் கணபதி ஆகியோர் மாநாட்டை விளக்கிப் பேசினர்.

பி இராமையாவை தலைவராகவும், கே எம் நடராசனை செயலாளராகவும் கொண்ட 15 பேர் அடங்கிய வரவேற்புக்குழு அமைக்கப் பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலக் குழு சார்பில் தீக்கதிர் அச்சகத்தில் (6/16 பைபாஸ் ரோடு, மதுரை,625018) அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர் கே. முத்தையா.

புகையிலை தொழிலாளர் மீதும் ஊதிய மு[illegible] பாய்கிற[illegible]

புதுக்கோட்டை[illegible] 22— இந்த ஆண்டு புதுக்கோட்டை பு[illegible]லைத் தொழிலாளர்கள்[illegible]கமாக பெற்ற 6 நாள் போனஸ் தொகையை ஊதிய முடக்கச் சட்டத்தைக் காட்டி நிர்வாகம் பிடித்துக்கொண்டது.

ஏற்கனவே குறைந்தபட்ச சம்பளம் வாங்கும் தொழிலாளர்களை இச்சட்டம் பாதிக்காது என்று அப்போதைய நிதி அமைச்சர்சவாண் கூறியிருந்தார். ஆனால் குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தில் இருக்கும்புகையிலைத் தொழிலாளர்கொஞ்சநஞ்ச போனசையும் பறித்துள்ள கொடுமையை எதிர்த்துப் போராடுவது என்று சிஐடியூ சங்கம் முடிவு செய்துள்ளது.

விவசாயிகள் சங்க[illegible] ஊழியர்கள்[illegible] தாக்கு[illegible]

சத்தி, டி[illegible]

சத்திய மங்கல[illegible]யொட்டியுள்ள கோ[illegible] பகுதியில், விவசாயிகள் [illegible]கம் பலப்பட்டு வரு[illegible]யும், தி மு க வின[illegible] கள் அம்பலப்படு[illegible] படுவதையும் பொ[illegible] காத, தி. மு. க. [illegible] சிலர் விவசாயிகள் ஊழியர்களைத் [illegible] ளனர்.

சங்கத்திலிருந்[illegible] ளர் பழனிச்சாமி, [illegible] சாமி ஆகியோர் தாக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக, போலீசில் புகார் செய்தும், [illegible] வரை எவ்வித நடவடி[illegible]யும் எடுக்கப்படவில்லை.

அண்மையில் கோ[illegible]தில் கே. பழனிச்சாமி [illegible]மையில் நடந்த க[illegible] பொதுக்கூட்டத்தில் எஸ், எம். பத்ரன், எஸ். என். மாரப்பன், காதர், முத்துக்கவுண்டர், வீரப்பன், மணிபாரதி, வேலுச்சாமி, ராமசாமி ஆகியோர் பேசினர்.

மாதர் மாநாடு: சிவகிரியிலிருந்து பஸ்

சிவகிரி, டிச. 24— இம்மாதம் 28, 29 தேதிகளில் திருவாரூரில் நடக்கும் மாதர்சங்கமாநாட்டுக்கு நெல்லை மாவட்டத்தின் மேற்கு பிராந்தியத்திலுள்ள மாதர்கள் ஒரு லாரியில் புறப்பட்டுச் செல்கின்றனர். 29ந்தேதி நடக்கும்பேரணியில் கலந்து கொள்கிறார்கள்.

வேலைநிறுத்தத்தின் பலன் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரம்

புதுவை, டிச. 23— இ[illegible]வி அரியூர் சர்க்கரை [illegible]பயின் கேன் யார்டு [illegible]தியில் கடந்த 15 ஆண்டுகளாக வேலை பார்த்து வரும் 50 பேர் காண்ட்ராக்ட் தொழிலாளர்களாக வேலைபார்த்து வருகின்றனர். இந்த அக்கிரமத்தை எதிர்த்துதொடர்ந்து போராடியதால், கடந்த அக்டோபரில் காண்ட்ராக்டை நீக்கி கம்பெனித் தொழிலாளர்களாக ஏற்றுக்கொள்வதாக ஒப்பந்தம் செய்த நிர்வாகம் இன்னும் அமுலாக்கவில்லை. எனவே, அனைத்து தொழிலாளர்களும் சிஐடியூ, அண்ணா தி. மு. க., ஐ என் டி யூ சி, தி மு க சங்கங்கள் தலைமையில் வேலைநிறுத்தத்தில் இறங்கியபின், 40 பேர்களுக்கு கம்பெனித் தொழிலாளர்களாக கார்டுகள் போட்டுத்தரவும், மீதி 10 பேருக்கு காலியாகும் இடங்களுக்கு போடுவதாகவும் ஒத்துக்கொண்டது.

(2ம் பத்தி தொடர்ச்சி)

வெறியர்களே சி ஐ ஏயின் மாஸ்டர்கள்.

பென்டகன் உத்திரவின் பேரில் 'சி ஐ ஏ உளவாளிகள், தேசிய பாதுகாப்பு கமிட்டியினரிடமே உளவு வேலை பார்த்ததாக செனட்டர்கள் அடங்கிய ராணுவ சேவைகதி மீதான கமிட்டி பென்டகனை குற்றஞ்சாட்டியது என்றும் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுகிறது.

யுத்த எதிர்ப்பு, ஏனைய ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்பவர்களை பின் தொடரவும் அவர்களை படம் பிடிக்கவும் சி ஐ ஏ தலைமை தனது ஏஜெண்டுகளுக்கு உத்திரவிட்டுள்ளதாம்.

மேலும், வியட்நாம் மீது யுத்தம் தொடுப்பதையும், தொடுத்ததையும் எதிர்த்த பார்லிமெண்ட் உறுப்பினர்கள் கடுமையாக சிஐஏ ஏஜெண்டுகளால் கண்காணிக்கப்படுகின்றனர்.

உள் நாட்டு உளவு ஸ்தாபனங்கள் மீதே சிஐஏ உளவு ஸ்தாபனங்கள் உளவு வேலைகளை நடத்தியுள்ளன என்பதை ஜனாதிபதி ஃபோர்டு ஒப்புக் கொண்டார்.

வேண்டும், பெண் விடுதலை!

"பெண்டாட்டி தனை அடிமைப்படுத்த வேண்டி பெண்குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ?'

—கேள்விகேட்பவர் பாரதி!
பதில் சொல்ல வேண்டியவர்கள் ஆண்குலம்

★ உண்டாக்கிப் பாலூட்டி தாலாட்டுப் பாடி ஆளாக்கி விடும் அன்னையும் பெண்!

★ உடன் பிறந்த சகோதரியும் பெண்!

★ பெற்ற மகளும் பெண்!

★ மனைவியும் ஒரு பெண்ணே!

அவள் ஜடப் பொருளல்ல. ஊனும் உயிரும் உணர்ச்சியும் நிறைந்த மனிதப் பிறவி, வாழ்வின் இன்பத்திலும், துன்பத்திலும் இணைபிரியாது நின்று வாழ்வின் துணையாக குடும்பத்தின் விளக்காக ஒளிவீசும் துணைவி தான் மனைவி என்பதை நினைவுபடுத்தி,

சமுதாயத்தின் ஒடுக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் பெண் குலத்தின் விடுதலையை வலியுறுத்தும் ஒப்பற்ற மாநாடு! திருவாரூர் மாதர் மாநாடு!

விலைவாசிக் கொடுமைக்கு முடிவு கட்டுவோம்! வீணர் ஆட்சியை எதிர்த்து முரசு கொட்டுவோம்!